திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த ஆசிரியர்களுக்கு பெப்ரவரி மாதச் சம்பளம் கொடுக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன் ?

Mr. SPEAKER : The Hon. Minister has not answered whether it has been paid for February.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தக் கேள்வி வந்த போது, பெப்ரவரி மாதச் சம்பளம் என்றால் மார்ச் மாதம்தான் கொடுக்கவேண்டும். ஜனவரி முடிய சம்பளம் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

கட்டடம் கட்டுவது சம்பந்தமாகக் கேட்டார்கள். பொதுமக்கள் நன்கொடையை எதிர்பார்க்கிறார்கள். சிலர் முன்வந்திருக்கிறார்கள். அதற்கான முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. கல்லூரிக் கட்டடம் கட்ட எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. ஜனவரி மாதம் முடிய சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Thirumathi T. N. ANANDANAYAKI : The Wakf Board has got property worth Rs. 100 crores.

Mr. SPEAKER : You are repeating what Thiru K. T. K. Thangamani has done. This question is about the college in Madurai run by the Wakf Board.

Thirumathi T. N. ANANDANAYAKI : That Wakf Board is so rich. Why should they wait for private donation ?

Mr. SPEAKER : This is not allowed.

மாரியம்மன் கோவில் சமுத்திரம் நீர்நிலை.

***873. வின—திரு ந. சோமசுந்தரம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாரியம்மன் கோவில் சமுத்திரம் எனும் நீர்நிலை தண்ணீரை இறவை பாசனம் (**Lift Irrigation**) மூலம் விவசாயத்திற்கு பயன்படுத்துகின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்த மாரியம்மன் கோவில் சமுத்திரத்தைப் பலர் ஆக்கிரமிப்பு செய்து விவசாயம் செய்து வருகிறார்கள். அந்த ஆக்கிரமிப்பை வெளியேற்றி லிப்ட் இரிகேஷன் செய்து கொடுத்து விவசாயத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்து கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆக்கிரமிப்பு பற்றி தனிக் கேள்வி போட வேண்டும். இந்த ஏரி சிறு பாசனத் திட்டத்தின் கீழ் ரூ. 97,500 செலவில் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே உறுப்பினர் கோரியபடி நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை.

வேப்பங்குளம் கால்வாய்

*874 **விஞ.—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தாலுகா வேப்பங்குளம் கால்வாய் மராமத்து செய்ய வேண்டி 28–4–1971-ல் மனுச் செய்யப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு என்ன நடவடிக்கையெடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

எலும்பு உர உற்பத்தி நிலையங்கள்

*875 **விஞ.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கதர் கிராமத் தொழில் வாரியத்தால் நடத்தப்படுகின்ற எலும்பு உர உற்பத்தி நிலையங்கள் லாபத்தில் இயங்குகின்றனவா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : ஆம்.

திரு. **என். கிட்டப்பா :** லாபத்தில் நடந்து வருவதாக அறிவித்தார்கள். அதை விரிவுபடுத்தி இன்னும் சிலயிடங்களில் அத்தகைய உர உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்த அரசாங்கம் ஆவன செய்ய முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இப்போது நான்கு இடங்களில், கோவை மாவட்டத்தில் எருங்காட்டூர், மதுரை மாவட்டத்தில் எழுமலை, கூடலூர், நெல்லை மாவட்டத்தில் ராயகிரி ஆகிய ஊர்களில் எலும்பு குறைந்த விலையில் கிடைக்கிறது. இங்கே எலும்பைப் பொடியாக்கி உரம் ஆக்கும் தொழிற்கூடங்கள் நல்ல முறையில் இயங்குகின்றன. நன்கு இயங்கக் காரணம் பக்கத்தில் காடு இருக்கிறது. எலும்புகள் குறைந்த விலைக்குக் கிடைக்கிறது. விரிவுபடுத்த செயற்குறிப்பு இல்லை.